அளவில், அதுவரை அந்தத் தெப்பக்குளத்தில் தண்ணீர் இல்லாமல் யாரும் பார்த்ததே கிடையாது, தண்ணீரை முழுமையாக எடுத்து, முழுமையாகத் தூர் வாரியதும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களைத் தூர் வார வேண்டும், செப்பனிட வேண்டும் என்கிற அடிப்படையில், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை கட்டுப்பாட்டின் கீழுள்ள மொத்த திருக்கோயில்களில், 1,586 திருக்கோயில்களுக்கு 2,359 திருக்குளங்களில் 1,068 திருக்குளங்கள் புனரமைப்பு செய்ய வேண்டிய நிலையில் இருந்தன; மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றபின், 604 திருக்குளங்கள் சுமார் 3 கோடி ரூபாய் செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, நிதிநிலைக்கேற்ப, முன்னுரிமை அடிப்படையில் அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

38—

பேருந்து வசதி

***40882—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூரிலிருந்து பெங்களூரு மற்றும் சென்னைக்கு நேரடியாக குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2015 பிப்ரவரி 20

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூரிலிருந்து பெங்களூரு மற்றும் சென்னைக்கு நேரடியாக குளிர்சாதனப் பேருந்து இயக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் பகுதி பல்வேறு முக்கிய ஊர்களை உள்ளடக்கிய பகுதியாகும். பட்டுக்குப் பெயர்பெற்ற திருப்புவனம். திருவிடைமருதூர் பகுதிக்கு தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்தும் தமிழகத்திற்கு வெளியிலிருந்தும் பல்வேறுதரப்பட்ட மக்கள் வருகை தந்து, பட்டுப் புடவைகளை, திருமணத்திற்குத் தேவையான துணிகளை வாங்கிச் செல்கின்றனர்.

முற்பகல் 10-50

அதேபோல, திருவிடைமருதூரை அடுத்துள்ள ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தைக் கொண்டிருக்கிறது. அதுவும் விவசாயிகள் அதிகமாக வந்து செல்கின்ற பகுதி. அதேபோல, சூரியனார் கோயிலுக்குட்பட்ட நவக்கிரகத் தலங்கள் திருவிடைமருதூரைச் சுற்றியுள்ளன. எனவே, இந்தப் பகுதி மக்கள் சென்னைக்கும், பெங்களூருவுக்கும் சென்று வருவதற்கு குளிர் சாதனப் பேருந்துகளை வழங்குவதற்கு வாய்ப்பில்லை என்றாலும், சொகுசுப் பேருந்துகளை வழங்கிட வேண்டும் என்று அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. கோவி. செழியன் அவர்கள் சார்பாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள், அடித்தட்டு மக்கள், சிறப்பான பேருந்து வசதிகளைப் பெற வேண்டும் என்பதற்காக

2015 பிப்ரவரி 20]

இதுவரை தமிழக அரசினுடைய வரலாற்றில் இல்லாத வகையில் நீண்ட தூரம் செல்லக்கூடிய மக்கள் சென்னைக்கு வந்து செல்வதற்காக அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலிருந்தும் சென்னைக்கு குளிர் சாதனப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதற்காக 50 குளிர் சாதனப் பேருந்துகளுக்கு 18 கோடியே 56 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் நிதியைக் கொடுத்து உத்தரவை வழங்கியிருக்கின்றார்கள். 50 குளிர்சாதனப் பேருந்துகளுக்குண்டான அடிச்சட்டங்கள் கொள்முதல் செய்தல், பேருந்துகள் கூண்டு கட்டுகின்ற பணிகள் ஆகியவை நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி Ultra Deluxe பேருந்துகள் மேலும் கூடுதலாக 202 பேருந்துகளைக் கொள்முதல் செய்வதற்காக 53 கோடியே 90 இலட்சம் ரூபாய் நிதியை மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்க உத்தரவிட்டு, இந்த 3½ ஆண்டுகளில் நீண்ட தூரம் செல்லக்கூடிய 453 புதிய பேருந்துகளை வழங்கி இன்று மக்கள் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றார். கும்பகோணம்-சென்னை, தஞ்சாவூர்-சென்னை உள்ளிட்ட பல்வேறு வழித்தடங்களில் திருவிடைமருதூர் வழியாக 50 பேருந்துகள்மூலம் 100 நடைகள் பேருந்துகள் சென்னைக்கு இயக்கப்பட்டு வருகின்றன. பயணிகளின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு, பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு அதற்குண்டான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வேப்பனஹள்ளி தொகுதியில், இதுவரையிலும் பேருந்துகள் இல்லாத 4 வழித்தடங்களில், இந்த 4 ஆண்டு காலத்திலே பல முறை விண்ணப்பித்தும் இந்தப் பேருந்துகள் கிடைக்கவில்லை. ஆகவே, ஓசூரிலிருந்து சென்னசந்திரம்வரை செல்கின்ற புறநகர்ப் பேருந்தை கர்நாடக மாநில எல்லையிலே அமைந்துள்ள சேப்பரப்பள்ளிவரை நீட்டித்துத் தரவும்,

ஒசூரிலிருந்து சூளகிரிவரை செல்கின்ற நகரப் பேருந்துகளில் ஏதாவது ஒன்றை நீட்டித்து, சின்னாறு, பெரியபேடப்பள்ளி, சின்னபேடப்பள்ளி, சரக்கால்பள்ளி, பஸ்சலப்பள்ளி வழியாக பொன்னல்நத்தம் வரை நீட்டித்துத் தருமாறும், ஒசூரிலிருந்து உத்தனப்பள்ளிவரை செல்கின்ற நகரப் பேருந்துகளில் ஏதாவது ஒன்றை நீட்டித்து E.B. அலுவலகம், பென்னிக்கல், குருபரப்பள்ளி, நாகமங்கலம், கொத்தப்பள்ளி வழியாக விருப்புரம் வரை நீட்டித்துத் தரவும், அதேபோல தேன்கனிக்கோட்டை முதல் தேவநத்தம்வரை செல்கின்ற பேருந்தைத் திருப்பி கடைசிவரை நீட்டித்துத் தருமாறும் நான் பலமுறை விண்ணப்பித்தும் அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நான்கு வழித்தடங்களிலும் இந்தப் பேருந்துகளின் வழித்தடத்தை நீட்டித்து அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுடைய நலனைக் காப்பார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகரமாக இருந்தாலும் சரி, நகரமாக இருந்தாலும் சரி, கிராமங்களாக இருந்தாலும் சரி அனைத்துப் பகுதி மக்களும் சிறப்பான பேருந்து வசதிகளைப் பெற வேண்டும் என்பதற்காக, அது சென்னை மாநகரமாக இருந்தாலும் சரி, குறுகிய வளைவுகளாக இருந்தாலும் சரி, சிறிய சாலைகளாக இருந்தாலும் சரி, அந்தப் பகுதி மக்களும் சிறப்பான பேருந்து வசதிகளைப் பெற வேண்டும் என்பதற்காக தமிழக அரசினுடைய வரலாற்றில் முதல் முறையாக 100 சிற்றுந்துகளை மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். மக்களுக்காக நான், மக்களால் நான் என்னும் இலட்சிய நோக்கத்தோடு மக்களுக்காக மக்கள் ஆட்சி நடத்தி வரும் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்ட 100 சிற்றுந்துகளில் இதுவரை 3 கோடியே 25 இலட்சத்து 58 ஆயிரத்து 386 பயணிகள் பயணம் செய்திருக்கின்றனர். இது மிகப் பெரிய ஒரு புதிய வரலாறு. இந்தப் பயணிகளுடைய பயணத்தின்மூலம் 100 சிற்றுந்துகள்

2015 பிப்ரவரி 20]

இதுவரை 24 கோடியே 41 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் வருவாய் ஈட்டியிருக்கின்றன. இதை யாரும், எந்த அரசியல் தலைவர்களும் சிந்திக்கவில்லை. ஏழையெளிய மக்களாக இருந்தாலும் சரி, மாநகராட்சியில் இருக்கின்ற சிறிய தெருக்களாக இருந்தாலும் சரி, சிறப்பான பேருந்து வசதிகளைப் பெற வேண்டும் என்பதற்காக மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதனை வழங்கியிருக்கின்றார்கள்.

முற்பகல் 10-55

அதேபோல், கிராமத்தில் இருக்கின்ற மற்ற பகுதிகளும் சிறப்பான பேருந்து வசதிகளைப் பெற வேண்டுமென்பதற்காக 1,136 புதிய வழித்தடங்களிலும். பேருந்துகளை வழங்கி இன்று அவை மக்கள் சேவையாற்றி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு முறை விண்ணப்பித்ததாகச் சொன்னார்கள். பல்வேறு முறை விண்ணப்பிக்கப்பட்ட அனைத்து மனுக்கள்மீதும் துறை சார்பாக நடவடிக்கை எடுத்து, வழித்தட நீட்டிப்புகள், புதிய பேருந்துகள் உள்ளிட்டவை முழுமையாக மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு, உத்தரவோடு இயக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் கூடுதலாகத் தேவையென்று சுட்டிக்காட்டியுள்ள வழித்தடங்களில், ஆய்வு செய்து பயணிகளுடைய அடர்வுகளுக்கு ஏற்ப அதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

39—

உயிர்ம டீசல் உற்பத்தி

***28840—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—